**ஹரி: ஓம்**

அருணாசலரை வணங்கி கீதாசாஸ்திரத்திரத்திற்கு நான் கீதாலஹரி என்ற பெயருள்ள (சங்கரச்சாரியாரின்) சாங்கர பாஷ்யத்திற்க்கு இந்த பதவுரையை செய்கின்றேன்.

ॐ नारायणः परः अव्यक्ताद् अण्डम् अव्यक्त-संभवम्।
अण्डस्य अन्तः तु इमे लोकाः सप्त-द्वीपा च मेदिनी।।१।।

ஓம் ஸ்ரீமன் நாரயாணன் அவ்யக்தத்தினை அதாவது மாயையினைக் காட்டிலும் வேறானவர், அந்த அவ்யக்தத்திலிருந்து உண்டானது இந்த பிரம்மாண்டம் அதாவது (ஹிர்ண்யகர்பத்தில்) இந்த உலகங்கள் உள்ளது. ஏழு தீபங்களை கொண்ட இந்த பிரதிவியும் (உலகங்கள், பூர் ,புவ, சுவ முதலியவை, ஏழு தீபங்கள் - ஜம்பு, ப்லக்ஷி, ஷால்மலி, குஷ , க்ரௌஞ்ச, ஷாக்க மற்றும் புஷ்கர ஆகியவை).

स भगवान् सृष्ट्वा इदं जगत् तस्य च स्थितिं चिकीर्षुः मरीच्यादीन् अग्रे सृष्ट्वा प्रजापतीन् प्रवृत्ति-लक्षणं
धर्मं ग्राहयामास वेदोक्तम्।

இந்த உலகத்தினை அந்த பகாவனை சிருஷ்டித்து (படைத்து) அதனை பரிபாலனம் (காக்க) செய்யும் ஆசையுடன் மரீசி முதலிய

பிரஜாபதிகளை சிருஷ்டித்து (படைத்து) அவர்களை வேதத்தில் பிரவிருத்தியாக கூறப்பட்ட தர்மத்தினை கடைபிடிக்க வைத்தார்.

அவர்களிலிருந்து வேறான சனகர்,சனந்தனர் முதலியவைகளை படைத்து அவர்களை நிவிருத்தியாக கூறப்பட்ட ஞானம் மற்றும் வைராக்கியத்தினை லக்ஷணையாக உடையதான தர்மத்தினை கடைப்பிடிக்கவைத்தால்.

ततः अन्यान् च सनक-सनन्दनादीन् उत्पाद्य निवृत्ति-धर्मं ज्ञान-वैराग्य-लक्षणं ग्राहयामास। द्विविधः हि वेदोक्तः धर्मः, प्रवृत्ति-लक्षणः निवृत्ति-लक्षणः च। तत्र एकः जगतः स्थिति-कारणं, प्राणिनां साक्षाद् अभ्युदय-निःश्रेयस-हेतुः यः स धर्मः ब्राह्मणाद्यैः वर्णिभिः आश्रमिभिः च श्रेयोर्थिभिः अनुष्ठीयमानः।

வேதத்தில் இரண்டு வகையானதர்மங்களே கூறப்பட்டுள்ளது. பிரவிருத்தி (ஈடுபடுதல்) மற்றும் நிவிருத்தி (விடுதல்)என்னும் இந்த உலகமானது, நிலைத்திருக்க காரணமானதும்

ஜீவராசிகளின் மேன்மையானதற்கும் மோஷத்திற்கும் நேரடியான காரணமாக இருக்கும் தர்மானது பிராம்மணர் முதலிய வர்ணத்தினரும் (நான்கு வகை) ஆசிரமத்தினைச் சேர்ந்தவர்களும் மேன்மையை அடைய கடைப்பிடிக்க வேண்டியது.

दीर्घेण कालेन अनुष्टातॄणां कामोद्भवात् हीयमान-विवेक-विज्ञान-हेतुकेन अधर्मेण अभिभूयमाने धर्मे प्रवर्धमाने च अधर्मे जगतः स्थितिं परिपिपालयिषुः स आदिकर्ता नारायणाख्यः विष्णुः भौमस्य ब्रह्मणः ब्रह्मणत्वस्य रक्षणार्थं देवक्यां वसुदेवाद् अंशेन कृष्णः किल संबभूव।

நெடுங்காலத்திற்க்கு இப்படி அனுஷ்டிபவர்களுக்கு காலமானது ஓங்கியெழுவதால் விவேகமானது அழிந்து போனத்தற்கும் காரணமான அதர்மத்தால் தர்மம் அடங்குவதும், அதர்மம் தலைத் தோங்குவதுமாக உள்ள நிலையில், உலகத்தினை காக்கும் பணியை முறையாக செய்ய ஆசையோடு ஆதிபகவானை நாராயணன் என்கிற பெயருடைய விஷ்ணுவானவர் இந்த பூவுலகத்தின் பிரம்மமான (தெய்வமான) பிராம்மாணர்களின் பிராம்மணத்தம்மையினை காப்பற்ற வசுதேவரினால் அவருடைய அம்சமான தேவகிக்கு கிருஷ்ணராக தோன்றினார் என்பது தெரிந்ததே.

ब्राह्मणत्वस्य हि रक्षणेन रक्षितः स्याद् वैदिकः धर्मः तद्-अधीनत्वाद् वर्ण-आश्रम-भेदानाम्।

பிராம்மணத் தன்மையை காப்பாற்றுவதினால் மட்டுமே வைதிக தர்மமானது காப்பாற்றப் பட்டதாகிறது, வர்ணாஷ்ரம் பிரிவுகளானது அதற்கு அதீனமாக இருப்பதால்.

स च भगवान् ज्ञान-ऐश्वर्य-शक्ति-बल-वीर्य-तेजोभिः सदा संपन्नः त्रिगुणात्मिकां वैष्णवीं स्वां मायां मूलप्रकृतिं वशीकृत्य अजः अव्ययः भूतानाम् ईश्वरः नित्य-शुद्ध-बुद्ध-मुक्त-स्वभावः अपि सन् स्वमायया देहवानिव जात इव लोकानुग्रहं कुर्वन् लक्ष्यते,

அந்த பகவானும் ஞானம், ஐஸ்வர்யம், சக்தி, பலம், வீரியம் மற்றும் தேஜசானது எப்போதும் கூடியதாகவும், முக்குணமுடைய வைஷ்ணவீயான தன்னுடைய மாயாவானா மூலபிரகிருதியை வசம்செய்து பிறப்பற்ற (அஜ), அழிவற்ற (அவ்யயம்) பூதங்களில் ஈஷ்வரணானவர் நித்தியம், சுத்தம், அறிவுடைய, முக்தரான இயல்புடையவரானாலும் தன்னுடைய மாயையினால் உடலை அடைந்தது போலவும், பிறப்படைந்தது போலவும், உலகத்தை அனுகிரகிப்பார் போலவும் காணப்படுகிறார்.

स्वप्रयोजनाभावे अपि भूत-अनुजिघृक्षया वैदिकं हि धर्मद्वयम् अर्जुनाय शोक-मोह-महोदधौ निमग्नाय उपदिदेश गुणाधिकैः हि गृहीतः अनुष्ठीयमानः च धर्मः प्रचयं गमिष्यतीति।

தனக்கு எந்த வித பிரயோஜனம் இல்லாத நிலையிலும் பூதங்களுக்கு (ஜீவன்களுக்கு) தயை புரியும் ஆசையுடன் வைதிகமானதேயான இரண்டு வகை தர்மத்தினையும் சோகத்திலும் மோகத்திலும் மூழ்கியிருக்கும் அர்சுனனுக்கு உபதேசித்தார், அதிகமான நற்குணத்தினையுடையவர்களில் ஏற்க்கப்பட்டதும் கடைபிடிக்கப்போவதுமான தர்மமே பிரசாரத்தினை அடையும் என்று.

तं धर्मं भगवता यथा उपदिष्टं वेदव्यासः सर्वज्ञः भगवान् गीताख्यैः सप्तभिः श्लोक-शतैः उपनिबबन्ध।

அந்த தர்மமானது எப்படி பகவானால் உபதேசிக்கப்பட்டதோ அப்படியே வேதவியாசரால், எல்லாமறிந்த பகவானினால் கீதா எனப்படும் எழுநூறு சுலோகங்களாய் தொடுக்கப்பட்டது.

तदिदं गीताशास्त्रं समस्त-वेदार्थ-सार-संग्रहभूतं दुर्विज्ञेयार्थं ।

அப்படிப்பட்ட இந்த கீதாசாஸ்திரமானது வேதம் முழுவதின் சாரமானதின் சங்கிரகம் ஆகும். இதன் பொருள் புரிவது மிகவும் கடினம்.

तद्-अर्थ-आविष्करणाय अनेकैः विवृत-पदार्थ-वाक्यार्थ-न्यायमपि अत्यन्त-विरुद्ध-अनेकार्थत्वेन लौकिकैः गृह्यमाणम् उपलभ्य अहं विवेकतः अर्थ-निर्धारण-अर्थं संक्षेपतः विवरणं करिष्यामि।

அதன் பொருளை விளக்குவதற்காக பலர் பதச்சேதம், சொற்பொருள், வாக்கியப்பொருள், கேள்விபதில் முதலியவை விளக்கமாக செய்தும் மிகவும் விரோதமான பலபொருளானது கூடியதாக உலகத்தவர்கள் புரிந்துகொள்வது கண்டு நான் புத்திபூர்வமாக அதன் பொருளை நிச்சயிப்பதற்காக சுருக்கமாக விளக்கத்தை செய்வேன்.

तस्य अस्य गीता-शास्त्रस्य संक्षेपतः प्रयोजनं परं निःश्रेयसं सहेतुकस्य संसारस्य अत्यन्त-उपरम-लक्षण्म्, तच्च सर्व-कर्म-संन्यास-पूर्वकाद् आत्मज्ञान-निष्ठारूपाद् धर्माद् भवति।

அப்படிப்பட்ட இந்த கீதா சாஸ்திரத்தின் பிரயோஜனம் சுருக்கமாக கூறினாய் மிகவும் மேன்மையான காரணம் கூடியதான சம்சாரத்தின் நிரந்தரமான நீக்கமேயாகும். அது எல்லா கர்மத்தினையும் விடுவதினாலே உண்டாகும். ஆத்மா ஞானத்தில் நிலைபெரும் தர்மத்தினால் உண்டாகும்.

तथा इममेव गीतार्थ-धर्मम् उद्दिश्य भगवता एवोक्तम् - 'स हि धर्मः स पर्याप्तः ब्रह्मणः पदवेदनम्' इत्यनुगीतासु।

அதனால் இந்த கீதையின் பொருளான தர்மத்தினை குறித்து பகவானே அனுகீதாவில் அந்த தர்மமே தகுதியுடையது பிரம்ம நிலையை அறிய என்று கூறியுள்ளார்.

किंच अन्यद् अपि तत्र एव उक्तम् - 'न एव धर्मी न च अधर्मी न च एव हि शुभ-अशुभी। यः स्याद् एकासने लीनः तूष्णीं किंचिद् अचिन्तयन्' इति, 'ज्ञानं संन्यास-लक्षणम्' इति च।

இதனைத் தவிர வேறு மற்றும் அங்கே கூறியுள்ளார். தர்மமுடையவரல்லாத அதர்மமுடையவரல்ல, நன்மை தீமையுடையருமில்லை, எவர் மேன்மையாக வேரெதுவும் சிந்திக்காது அந்த (பிரம்மம் எனப்படும்) ஆசனத்தில் லீனமடைந்தவரோ "ஞானத்தின் லக்ஷணை (குறி) சன்யாசம" என்றும்.

इह अपि च अन्ते उक्तम् अर्जुनाय - 'सर्व-धर्मान् परित्यज्य माम् एकं शरणं µक्ञ्क' इति।

இங்கும் கடைசியில் அர்ஜுனனிற்கு கூறியுள்ளார். "எல்லா தர்மத்தினையும் விடுத்து என்னை மட்டுமே சரணடைவாயாக" என்று.

अभ्युदय-अर्थः अपि यः प्रवृत्ति-लक्षणः धर्मः वर्ण-आश्रमान् च उद्दिश्य विहितः स च देवादि-स्थान-प्राप्ति-हेतुः अपि सन् ईश्वर-अर्पण-बुद्ध्या अनुष्ठीयमानः सत्त्व-शुद्धये भवति फल-अभिसन्धि-वर्जितः,

மேன்மையையடைய என்று கூறப்பட்ட பிரவிருத்தி லக்ஷணையான தர்மமும் வர்ணம் மற்றும் ஆசிரமத்தினை குறித்து கூறப்பட்டவையும் தேவதை முதலிய நிலைகளை அடைவிப்பதாக இருந்தால் ஈஷ்வரனுக்கு சமர்பிக்கும் புத்தியோடு செய்யப்பட்டதானால் சித்தத்தின் தூய்மைக்கு செய்யப்பட்டதாக ஆகும். பலனில் ஆசையில்லாத போது.

शुद्ध-सत्त्वस्य च ज्ञान-निष्ठा-योग्यता-प्राप्ति-द्वारेण ज्ञान-उत्पत्ति-हेतुत्वेन च निःश्रेयस-हेतुत्वमपि प्रतिपद्यते।

தூய்மையான சித்தமானது ஞானத்தில் நிலைபெறும் யோக்கியத் தன்மையினை அடைவிப்பதாக இருந்து ஞானத்தின் உண்டு செய்யும் காரணமாக ஆவதாலும் மேன்மையானதான நிலையையடைய காரணத்தன்மையும் ஆகின்றது.

यथा च इमम् अर्थम् अभिसंधाय वक्ष्यति - 'ब्रह्मणि आधाय कर्माणि यतचित्ताः जितेन्द्रियाः। योगिनः कर्म कुर्वन्ति संङ्गं त्यक्त्वा आत्मशुद्धये।।'

அதனால், இந்த பொருளையே குறிப்பதாக பின்னால் கூறுவார் ”கர்மத்தினை பிரம்மத்திற்க்கு சமர்ப்பிப்பயாக", ”யோகிகள கர்மத்தினை பற்றில்லாமல் ஆத்மசுத்திக்காக செய்வாா” என்றும்.

इमं द्विप्रकारं धर्मं निःश्रेयस-प्रयोजनं परमार्थतत्त्वं च वासुदेवाख्यं परब्रह्म-अभिधेयभूतं विशेषतः अभिव्यञ्जयद् विशिष्ट-प्रयोजन-संबन्ध-अभिधेयवद्-गीताशास्त्रं ।

இந்த இரண்டு வகையான தர்மமானது மேன்மைக்கு காரணமாகவும் பரமார்த்த தத்துவமான வாசுதேவன் என்ற பெயருடைய பரபிரம்மத்தினை நமக்கு போதிக்கும் இந்த கீதா சாஸ்திரமானது விசேஷமான பிரயோஜனம் சம்மந்தம் மற்றும் விஷயம் கூடியதானது.

यतः तदर्ध-विज्ञानेन समस्त-पुरुषार्थ-सिद्धिः अतः तद् विवरणे यत्नः क्रियते मया।

எதனால், இதன் பொருளானது நன்றாக அறிந்தால் எல்லா புருஷார்த்தமும் அடையப்பட்டதாக ஆகிறதோ, அதனால், இதற்கு விளக்கத்தினை செய்ய முயற்சிக்கிறேன்.

धृतराष्ट्र उवाच

திருதராஸ்டிரர் கூறினார்.

धर्मक्षेत्रे कुरुक्षेत्रे समवेता युयुत्सवः।

मामकाः पाण्डवाश्चैव किमकुर्वत सञ्जय।। 1.1।।

சஞ்ஜயனே, தர்மம் தழைக்கும் குருக்ஷேத்திரத்தில் யுத்தம் செய்யும் ஆசை கொண்டு கூடியிருக்கும் என்னுடையவர்களும் பாண்டவர்களும் என்ன செய்தார்கள்.

सञ्जय उवाच

சஞ்ஜயன் கூறினார்

दृष्ट्वा तु पाण्डवानीकं व्यूढं दुर्योधनस्तदा।

आचार्यमुपसङ्गम्य राजा वचनमब्रवीत्।। 1.2।।

யுத்தத்தின் தயார் நிலையில் வ்யூகம் அமைத்துள்ள பாண்டவர்களின் படையை கண்டு, துரியோதணன், தன்னுடைய ஆசாரியரிடத்தில் சென்று இந்த வார்த்தைகளை கூறினார்.

पश्यैतां पाण्डुपुत्राणामाचार्य महतीं चमूम्।
व्यूढां द्रुपदपुत्रेण तव शिष्येण धीमता।। 1.3।।

ஆசாரியரே, பாருங்கள் பாண்டவர்களின் மிகப்பெரிய படையினையும் தங்கள் சிஷ்யனான புத்திசாலியான துருபதனின் மகனின் வ்யூகத்தையும்.

अत्र शूरा महेष्वासा भीमार्जुनसमा युधि।
युयुधानो विराटश्च द्रुपदश्च महारथः।। 1.4।।

இதில் (அவர்கள் படையில்) சூரர்களும், வில் வித்தையில் கைதேர்ந்தவர்களும் பீமன் மற்றும் அர்சுனனுக்கு சமமானவர்கள் அதிகமாக போரிடும் சாத்யகீயும் திறமையாக எதிரியை விரட்டும் விராடரும் மகாரதியான துருபதரும் உள்ளனர்.

धृष्टकेतुश्चेकितानः काशिराजश्च वीर्यवान्।
पुरुजित्कुन्तिभोजश्च शैब्यश्च नरपुङ्गवः।। 1.5।।

எதிரிகள் அஞ்சும் திருஷ்டகேது, சேசிதானர் மற்றும் காசி ராஜர் ஆகிய பலசாலிகளும், புருஜித், குந்திபோஜர் மற்றும் ஷைப்பயர் ஆகிய உயர்ந்த மனிதர்களும்.

युधामन्युश्च विक्रान्त उत्तमौजाश्च वीर्यवान्।
सौभद्रो द्रौपदेयाश्च सर्व एव महारथाः।। 1.6।।

பராகிரமசாலியான யுதாமன்யுவும், உத்தமோஜரும் சுபத்திரையின் மகனான வீரியவானும் (அபிமன்யு) த்ரௌபதியின் மகனும் (பிரதிவிந்தயர்), ஆகிய எல்லோரும் மகாரதிகள்.

अस्माकं तु विशिष्टा ये तान्निबोध द्विजोत्तम।
नायका मम सैन्यस्य संज्ञार्थं तान्ब्रवीमि ते।। 1.7।।

த்விஜர்களின் (இருபிரப்பாளர்களில்) மேன்மையானவறே நம்மில் எவரெவர் விசேஷமானவர்களோ என்னுடைய படையின் தலைவர்களோ அவர்களை நன்றாக அறிய நான் உங்களுக்கு கூறுகின்றேன்.

भवान्भीष्मश्च कर्णश्च कृपश्च समितिञ्जयः।
अश्वत्थात्मा विकर्णश्च सौमदत्तिस्तथैव च।। 1.8।।

தாங்களும், பீஷ்மரும், கர்ணனும், வெல்ல முடியாத அஸ்வத்தாமனும், விகர்ணனும் சோமதத்தரின் மகனும் (பூரிஷ்ரவா) ஆவர்.

अन्ये च बहवः शूरा मदर्थे त्यक्तजीविताः।
नानाशस्त्रप्रहरणाः सर्वे युद्धविशारदाः।। 1.9।।

மற்றும் பல சூரர்களும் எனக்காக (வெற்றிக்காக ) உயிரையும் கொடுக்க தயாராக உள்ளார். அவர்கள் பல ஆயுதங்களின் பிரயோகம் அறிந்தவர்களும், பல யுத்தமுறைகளில் தேர்ச்சி பெற்றவர்களும் ஆவார்.

अपर्याप्तं तदस्माकं बलं भीष्माभिरक्षितम्।
पर्याप्तं त्विदमेतेषां बलं भीमाभिरक्षितम्।। 1.10।।

நம்முடைய பலம் (படை) போதியதாக இல்லாவிட்டாலும் பலம் பொருந்திய பீஷ்மரால் காப்பாற்றப்பட்டது. (அதனால் கவலையில்லை), ஆனால், போதிய படைபலம் உடையவர்களாக இருந்தாலும் பீமனால் காப்பாற்றப்பட்டதால் போதியது இல்லை.

अयनेषु च सर्वेषु यथाभागमवस्थिताः।
भीष्ममेवाभिरक्षन्तु भवन्तः सर्व एव हि।। 1.11।।

எல்லோரும் பொறுப்பிலிருந்தும் தங்கள் தங்கள் இடத்திலிருந்தும் பீஷ்மரையே காப்பாற்றவும் (தர்க்காக்கவும்).

तस्य संजनयन्हर्षं कुरुवृद्धः पितामहः।
सिंहनादं विनद्योच्चैः शङ्खं दध्मौ प्रतापवान्।। 1.12।।

அந்த வார்த்தைகளை கூறிய துர்யோதனனை சந்தோஷப்படுத்த குரு வம்சத்தில் மூத்தவரான பிதாமஹர் பீஷ்மன் சிங்கத்தின் கர்ஜனையைப் போன்றதான தன்னுடைய சங்கினை பலமாக வாசித்தார். (ஊதினார், முழங்கினார்).

ततः शङ्खाश्च भेर्यश्च पणवानकगोमुखाः।
सहसैवाभ्यहन्यन्त स शब्दस्तुमुलोऽभवत्।। 1.13।।

அதன்பின்னர், சங்கும், பேரிகளும், மிருதங்கம், பக்கவாஜம் போன்ற வாத்தியங்கள் ஒரே நேரத்தில் முழங்கின, அந்த ஓசையானது மிகவும் பயம் தரக்கூடியதாக இருந்தது.

ततः श्वेतैर्हयैर्युक्ते महति स्यन्दने स्थितौ।
माधवः पाण्डवश्चैव दिव्यौ शङ्खौ प्रदध्मतुः।। 1.14।।

அதன்பின்னர் வெள்ளை குதிரைப்பூட்டிய மிகப்பெரிய ரதத்தில் இருந்த படி மாதவனும் (கிருஷ்ணனும்) பாண்டவனும் (அர்ஜுனனும்) தங்களுடைய திவ்யமான சங்கை முழங்கினர்

पाञ्चजन्यं हृषीकेशो देवदत्तं धनंजयः।

पौण्ड्रं दध्मौ महाशङ्खं भीमकर्मा वृकोदरः।। 1.15।।

பாஞ்சஜன்யம் எனகிற சங்கை ஹ்ரீஷிகேசனும் (கிருஷ்ணன) தேவதத்த என்கிற சங்கை தனஞ்ஜயனும் (அர்ஜுனன்) மற்றவர்களுக்கு பயம் உண்டுபண்ணக்கூடியானான பீமனும் தன்னுடைய பௌண்ட்ரம் என்கிற சங்கினையும் முழங்கினர்.

अनन्तविजयं राजा कुन्तीपुत्रो युधिष्ठिरः।

नकुलः सहदेवश्च सुघोषमणिपुष्पकौ।। 1.16।।

ராஜாவான குந்திபுத்திரன் யுதிஷ்டிரனும் தன்னுடைய அனந்த விஜய என்கிற சங்கினையும், நகுலனும் சகாதேவனும் தங்களுடைய சங்கான சுகோவும் மற்றம் மணிபுஷ்பகத்தினையும் முழங்கினார்.

काश्यश्च परमेष्वासः शिखण्डी च महारथः।

धृष्टद्युम्नो विराटश्च सात्यकिश्चापराजितः।। 1.17।।

பெரிய வில்லாலியான காசிராஜன் மகாரதியான சிகண்டி, த்ருஷ்டத்யும்னனும் விராடனும், மற்றவர்களால் வெல்ல முடியாத சாத்யகியும் (சத்யகளின் மகன்).

द्रुपदो द्रौपदेयाश्च सर्वशः पृथिवीपते।

सौभद्रश्च महाबाहुः शङ्खान्दध्मुः पृथक्पृथक्।। 1.18।।

பூமி நாயகனே, துருபதன், த்ரௌபதியின் புத்திரனும் வலிய தோல்களையுடைய சுபத்திரையின் புத்திரனும் தங்கள்தங்கள் சங்கினை முழங்கினர்.

स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत्।

नभश्च पृथिवीं चैव तुमुलो व्यनुनादयन्।। 1.19।।

அந்த முழக்காமனது த்ருதராஷ்டிரனின் மகன் முதலியவர்களின் இதயத்தினை கிழித்தது, ஆகாயத்தினையும், பூமியினையும் அதன் எதிரொளியானது வியாபித்தது.

अथ व्यवस्थितान् दृष्ट्वा धार्तराष्ट्रान्कपिध्वजः।
प्रवृत्ते शस्त्रसंपाते धनुरुद्यम्य पाण्डवः।। 1.20।।

ராஜனே இப்படி அங்கு சூழ்ந்துள்ள த்ருதராஷ்டிரரின் மகன் முதலியவர்களை போருக்கு ஆயுத்தமான நிலையில் கண்டு ஹனுமன் பதித்த கொடியையுடைய பாண்டவனான அர்சுனன் தானும் தன்னுடைய வில்லை உயர்த்தி பிடித்து (தன்னுடைய தேரோட்டியான) பகவான் ஹிரிஷிகேஷனிடம் இந்த வார்த்தைகளை கூறினான்.

अर्जुन उवाच
**அர்ஜுனன் கூறினான்**

हृषीकेशं तदा वाक्यमिदमाह महीपते।
सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय मेऽच्युत।। 1.21।।

यावदेतान्निरीक्षेऽहं योद्धुकामानवस्थितान्।
कैर्मया सह योद्धव्यमस्मिन्रणसमुद्यमे।। 1.22।।

அச்சுதானே, என்னுடைய ரதத்தினை இரண்டு சேனைகளுக்கு இடையில் நிறுத்துவாயாக, எங்கிருந்து நான் சண்டையிட ஆசைகொண்டு நின்றுள்ள இவர்களை காண இயலுமோ, அதுமட்டுமல்லாமல் இந்த போரில் எவருடன் நான் சண்டையிட வேண்டும் என்றும் நிச்சயிக்க வேண்டும்.

योत्स्यमानानवेक्षेऽहं य एतेऽत्र समागताः।
धार्तराष्ट्रस्य दुर्बुद्धेर्युद्धे प्रियचिकीर्षवः।। 1.23।।

போரிட தயராக உள்ள இங்கு கூடியிருப்பவர்களை கெட்டபுத்தியடைய துரியோதனுக்கு நன்மையை செய்ய ஆசையுடைய (அவர்களை காண ரதத்தினை நடுவில் நிருத்துவீர்களாக.)

सञ्जय उवाच

**சஞ்ஜயன் கூறினார்**

एवमुक्तो हृषीकेशो गुडाकेशेन भारत।

सेनयोरुभयोर्मध्ये स्थापयित्वा रथोत्तमम्।। 1.24।।

பாரதரே (திருதரஷ்டிரரே), அர்ஜுனனால் கிருஷ்ணருக்கு இவ்வாறு கூறப்பட்ட பின்னர் கிருண்ணன் அந்த உத்தமமான ரதத்தினை இரண்டு படைகளுக்கு இடையில் நிறுத்தினார்.

भीष्मद्रोणप्रमुखतः सर्वेषां च महीक्षिताम्।

उवाच पार्थ पश्यैतान्समवेतान्कुरूनिति।। 1.25।।

பீஷ்மர், த்ரோனர் முதலிய எல்லா ராஜாக்களின் முன்னால் நிறுத்தி கூறினார், அர்ஜுனா, கூடியிருக்கும் இந்த கௌரவர்களை நன்றாக பார் என்றார்.

तत्रापश्यत्स्थितान्पार्थः पितृ़नथ पितामहान्।

आचार्यान्मातुलान्भ्रातृ़न्पुत्रान्पौत्रान्सखींस्तथा।। 1.26।।

श्वशुरान्सुहृदश्चैव सेनयोरुभयोरपि।

तान्समीक्ष्य स कौन्तेयः सर्वान्बन्धूनवस्थितान्।। 1.27।।

இரண்டு படைகளிலும், அர்ஜுனன், அப்பாவின் சம்பந்தப்பட்டவர்கள், தாத்தா, ஆச்சாரியார்கள், மாமா, சகோதரர்கள், மகன்கள், பேரன்கள், நண்பர்கள், மச்சான்கள், உற்றார்கள் ஆகிய எல்லோரையும் கண்டான்.

அங்கு சண்டையிட கூடியுள்ள சொந்தங்களை கண்ட அர்ஜுனன் மிகவும் தயைகொண்டு வருத்தத்துடன் இதனை கூறினான்.

अर्जुन उवाच

**அர்ஜுனன் கூறினான்**

कृपया परयाऽऽविष्टो विषीदन्निदमब्रवीत्।
दृष्ट्वेमं स्वजनं कृष्ण युयुत्सुं समुपस्थितम्।। 1.28।।

सीदन्ति मम गात्राणि मुखं च परिशुष्यति।
वेपथुश्च शरीरे मे रोमहर्षश्च जायते।। 1.29।।

கிருஷ்ணா, சண்டையிட ஆசையுடன் கூடியுள்ள சொந்தமான (நம்மவர்கள்) இவர்களை கண்டு என்னுடைய உடல் நிலையிழக்கின்றது முகம் தொய்கிறது, உடல் நடுங்குகின்றது, உடலில் உள்ள ரோமங்களும் மயிர்க்கூச்செரிகின்றது.

गाण्डीवं स्रंसते हस्तात्त्वक्चैव परिदह्यते।
न च शक्नोम्यवस्थातुं भ्रमतीव च मे मनः।। 1.30।।

காண்டீபம் என் கைகளிலிருந்து நழுவுகின்றது. என் உடலானது பற்றி எரிகின்றது, இருக்கையில் (ரதத்தின்) அமரவும் என்னால் இயலவில்லை அதனால் என் மனமும் அலைபாய்கின்றது.

निमित्तानि च पश्यामि विपरीतानि केशव।
न च श्रेयोऽनुपश्यामि हत्वा स्वजनमाहवे।। 1.31।।

கேசவா நான் தீய சகுணங்களை காணுகின்றேன், நம்மவர்களை கொள்வதால் எந்த விதமான மேன்மையும் உண்டாகுவதை நான் காணவில்லை.

न काङ्क्षे विजयं कृष्ण न च राज्यं सुखानि च।
किं नो राज्येन गोविन्द किं भोगैर्जीवितेन वा।। 1.32।।

கிருஷ்ணா, நான் வெற்றியை விரும்பவில்லை, அதனால் உண்டாகும் ராஜியத்தையோ, சுகத்தையோ கூட விரும்பவில்லை கோவிந்தா, அப்படியடைப்படும் ராஜியத்தால் என்ன பயன், அதன் போகங்களினாலும், என் உயிர் வாழ்வதாலும் என்ன பயன்?

येषामर्थे काङ्क्षितं नो राज्यं भोगाः सुखानि च।
त इमेऽवस्थिता युद्धे प्राणांस्त्यक्त्वा धनानि च।। 1.33।।

நாம் எவருக்காக ராஜியம், போகம் மற்றும் சுகத்தினை அடைய விரும்புகின்றோமோ, அவர்கள் இதோ இங்கே யுத்தத்தில் தங்கள் பிராணனையும் பொருளையும் விடுத்து நிற்கின்றனர்.

आचार्याः पितरः पुत्रास्तथैव च पितामहाः।
मातुलाः श्चशुराः पौत्राः श्यालाः सम्बन्धिनस्तथा।। 1.34।।

(அதாவது,) ஆச்சாரியர்கள், சித்தப்பா/ பெரியப்பா, மகன்கள், பேரன்கள் தாத்தா, மாமா, மருமகன்கள், மச்சான்மார்கள் மற்றும் பல சம்பந்த முடையவர்கள்.

एतान्न हन्तुमिच्छामि घ्नतोऽपि मधुसूदन।
अपि त्रैलोक्यराज्यस्य हेतोः किं नु महीकृते।। 1.35।।

மதுசூதான, இவர்களை என் உயிர் போனாலும் நான் கொல்ல விரும்பேன், இந்நிலையில் இந்த மூவுலகினையும் ஆளுவதற்கும், பூமிக்கும் எவ்வாறு செய்வேன்.

निहत्य धार्तराष्ट्रान्नः का प्रीतिः स्याज्जनार्दन।
पापमेवाश्रयेदस्मान्हत्वैतानाततायिनः।। 1.36।।

ஜனார்தனா, திருதராஸ்டிரர் சம்பந்தப்பட்டவர்களை கொன்று இங்கு என்ன சுகத்தையடைவோம்? நம் சொந்தங்களை கொல்வதால் பாவத்தையே அடைவோம்!

तस्मान्नार्हा वयं हन्तुं धार्तराष्ट्रान्स्वबान्धवान्।
स्वजनं हि कथं हत्वा सुखिनः स्याम माधव।। 1.37।।

அதனால், திருதராஷ்டிரர் சம்பந்தப்பட்ட சொந்தங்களை கொல்வது ஏற்புடையது இல்லை, நம்மவர்களை கொன்று நாம் எவ்வாறு இன்புற இயலும் (சுகப்பட).

यद्यप्येते न पश्यन्ति लोभोपहतचेतसः।
कुलक्षयकृतं दोषं मित्रद्रोहे च पातकम्।। 1.38।।

பேராசைகொண்ட இவர்களை இந்த விஷயத்தினை, குலத்தின் நாசத்தால் உண்டாகும் தோஷத்தையும் (செய்நன்றி) துரோகத்தினால் உண்டாகும் பாவத்தினையும் காணவில்லை.

कथं न ज्ञेयमस्माभिः पापादस्मान्निवर्तितुम्।
कुलक्षयकृतं दोषं प्रपश्यद्भिर्जनार्दन।। 1.39।।

ஜனார்தனா, ஏன் இந்த பாவத்திலிருந்து உண்டாகும் தோஷத்தினை நோக்க

வழியானது (நீக்க வழியினை) ஏன் விசாரிக்கவில்லை? குல நாசத்தால் உண்டாகும் பாவத்தை அறிந்த பின்னரும்.

कुलक्षये प्रणश्यन्ति कुलधर्माः सनातनाः।
धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत।। 1.40।।

குலம் நாசமடைவதால் மிகவும் பழமையான குலதர்மங்கள் நாசம் அடைகின்றது. இப்படி தர்மமானது அழிந்ததால் அதர்மத்தின் பிடியில், அந்த குலம் விழுந்துவிடும்.

अधर्माभिभवात्कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः।
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसङ्करः।। 1.41।।

கிருஷ்ணா, அதர்மமானது சூழ்வதால் குலப்பெண்கள் கலங்கம் அடைகின்றனர். வார்ஷ்னேயா (விருஷ்ணி வம்சத்தவர்). பெண்கள் கலங்கமடைவதால் பிறவர்ணசேர்க்கையானது உண்டாகின்றது.

सङ्करो नरकायैव कुलघ्नानां कुलस्य च।
पतन्ति पितरो ह्येषां लुप्तपिण्डोदकक्रियाः।। 1.42।।

வர்ண சங்கரமானது (சேர்க்கை) குலத்தையும், அதனை நலம் செய்பவர்களையும் நரகத்தில் தள்ளும் அதனால், பிண்டம் மற்றும் நீர் இல்லாமல் அவர்கள் பித்துருக்களும் (மேல்லோகத்தில் இருக்கும் பெரியவர்கள்) கீழ் நிலையை அடைகின்றனர்.

दोषैरेतैः कुलघ्नानां वर्णसङ्करकारकैः।
उत्साद्यन्ते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः।। 1.43।।

இப்படிப்பட்ட தோஷத்தால் வர்ணசேர்க்கையால் உண்டாகும் பழமையான ஜாதி தர்மங்களும் (முறைகள்) குலதர்மங்களும் வேரோடு அழிக்கப் படுகின்றது.

उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन।
नरकेऽनियतं वासो भवतीत्यनुशुश्रुम।। 1.44।।

ஜனார்தனா, குலதர்மமானது அழிந்த மனுஷ்யர்கள் நரகத்தில் முடிவில்லாமல் வாழுவார்கள் என்று நாம் கேள்வி பட்டிருக்கிறோம்.

अहो बत महत्पापं कर्तुं व्यवसिता वयम्।
यद्राज्यसुखलोभेन हन्तुं स्वजनमुद्यताः।। 1.45।।

ஐயோ, நாம் எப்படிப்பட்ட பெரிய பாவத்தினைப் புரிய பிரவிருத்தித்துள்ளோம், ராஜ்ஜிய சுகத்தினையையும் பேராசையாய் நம்மவர்களையே அழிக்க துணிந்தோம்.

यदि मामप्रतीकारमशस्त्रं शस्त्रपाणयः।
धार्तराष्ट्रा रणे हन्युस्तन्मे क्षेमतरं भवेत्।। 1.46।।

ஆனால், ஆயுதமேந்தாத நிலையில் என்னை ஆயுத மேந்திய திருதிராஷ்ரன் ஆட்கள் இந்த யுத்தத்தில் கொன்றாலும் அது எனக்கு நன்மையையே அளிக்கும்.

सञ्जय उवाच
**சஞ்ஜயன் கூறுகினார்**

एवमुक्त्वाऽर्जुनः संख्ये रथोपस्थ उपाविशत्।
विसृज्य सशरं चापं शोकसंविग्नमानसः।। 1.47।।

இவ்வாறு கூறிய அர்ஜுனன் சோகவயப்பட்டவனாக தன்னுடைய வில்லையும் அம்பாரியையும் இறக்கி யுத்தகளத்திலுள்ள தன்னுடைய ரதத்தில் அமர்ந்தான்.

# அத்யாயம் - 2

सञ्जय उवाच

**சஞ்ஜயன் கூறினார்**

तं तथा कृपयाऽविष्टमश्रुपूर्णाकुलेक्षणम्।

विषीदन्तमिदं वाक्यमुवाच मधुसूदनः।। 2.1।।

இப்படி தன்னுடையவர்களை கண்டு மனமுறுகியதால் கண்களில் கண்ணீர் பெறுகி, சக்தியற்றவனாக உள்ள அர்ஜுனனிடம் கிருஷ்ணர் இவ்வாறு கூறினார்.

श्री भगवानुवाच

**ஸ்ரீபகவான் கூறினார்**

कुतस्त्वा कश्मलमिदं विषमे समुपस्थितम्।

अनार्यजुष्टमस्वर्ग्यमकीर्तिकरमर्जुन।। 2.2।।

அர்ஜுனா, உனக்கு எங்கிருந்து இப்படிப்பட்ட மேன்மையானவர்களுக்கு மேன்மையை தராத, கெட்ட பெயரினை தரும் சிந்தனைகள் இந்த நேரத்தில் உண்டாகிறது.

क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते।

क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परन्तप।। 2.3।।

பார்த்தா, ஆண்மைக்கு தகாத நிலையை நீ அடையாதே. மற்றவர்களை எரிக்கும் பரந்தபா, கீழ்தரமான இதயத்தின் பலவீனத்தை உடனே விடுத்து எழுந்திரு.

अर्जुन उवाच

**அர்ஜுனன் கூறினான்**

कथं भीष्ममहं संख्ये द्रोणं च मधुसूदन।
इषुभिः प्रतियोत्स्यामि पूजार्हावरिसूदन।।२.४।।

மதுசூதனா, எவ்வாறு நான் பீஷ்மருடனும் துரோணருடனும் எவ்வாறு அம்புகள் கொண்டு போரிடுவேன? அவர்கள் பூஜிக்க தகுந்தவர்கள் அன்றோ, அரிசூதனா (எதிரிகளை அழிப்பவனே)

गुरूनहत्वा हि महानुभावान्
श्रेयो भोक्तुं भैक्ष्यमपीह लोके।
हत्वार्थकामांस्तु गुरूनिहैव
भुञ्जीय भोगान् रुधिरप्रदिग्धान्।। 2.5।।

அப்படிப்பட்ட மேன்மையான பூஜிக்க தகுந்த குருக்களை கொல்லாமல், பிச்சை எடுத்து வாழ்வது மேன்மையானது, விஷயத்திற்கு (சொத்து) ஆசைப்பட்டு கொன்றாலும், இரத்தம் தோய்ந்த கைகளாலேயே அதனை அடைய வேண்டிவரும்.

न चैतद्विद्मः कतरन्नो गरीयो
यद्वा जयेम यदि वा नो जयेयुः।
यानेव हत्वा न जिजीविषाम-
स्तेऽवस्थिताः प्रमुखे धार्तराष्ट्राः।। 2.6।।

எது உகந்தது என்று நாம் அறியவில்லை, நாம் வெற்றி பெறுவொமா அல்லது தோற்பொமா, எவரை கொன்று உயிர்வாழ்வதில் விருப்பம் இல்லையே அப்படிபட்ட திருதராஷ்டிரர்களை அல்லவா எதிர்த்து நிற்கின்றார்கள்.

நாம் செய்வதற்க்குகந்தது என்ன என்று அறியவில்லை? அதுமட்டுமல்லாமல் நாம் வெற்றிவடைவோமா? அல்லது வெற்றிடையப்படுவோமா? (நம்மை அவர்கள் வெற்றிபெறுவார்களா?) என்றும், எவரை கொன்று நாம் உயிரோடிருக்க விரும்பவில்லையோ அப்படிப்பட்ட திருதராஷ்டிராரின் ஆட்களே நம்முன்னே நிற்கிறார்கள்.

कार्पण्यदोषोपहतस्वभावः
पृच्छामि त्वां धर्मसंमूढचेताः।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे
शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्।। 2.7।।

இப்படிப்பட்ட பேடித்தனத்தால் என்னுடைய இயல்பை இழந்த நான் தர்மம் எது என்று தீர்மானிக்க இயலாத மோகத்தை அடைந்ததால் உங்களிடம் கேட்கிறேன், எது மேன்மையையே தருமோ அதனை எனக்கு கூறுவீராக, நான் தங்களின் சிஷ்யனாக தங்களிடம் அடைக்கலத்தை அடைந்தவன்.

न हि प्रपश्यामि ममापनुद्या-
द्यच्छोकमुच्छोषणमिन्द्रियाणाम्।
अवाप्य भूमावसपत्नमृद्धम्
राज्यं सुराणामपि चाधिपत्यम्।। 2.8।।

நான் இவ்வாறு அடைந்த என்னுடைய இந்திரியங்களை பிழிந்தெடுக்கும் சோகத்தினை நீக்குவதற்க்கு இந்த பூமியில் உள்ள செல்வங்களைனைத்துமோ, ராஜ்ஜியமோ அல்லது தேவதைகளின் சுகமோ நீங்குவதாக காணவில்லை.

सञ्जय उवाच
**சஞ்ஜயன் கூறினான்**

एवमुक्त्वा हृषीकेशं गुडाकेशः परन्तप।
न योत्स्य इति गोविन्दमुक्त्वा तूष्णीं बभूव ह।। 2.9।।

எதிரிகளை எரிப்பவரே (திருதராஷ்டிரரே) இவ்வாறு ரிஷீகேசன் (அர்ஜுனன்) குடாகேஷனிடம் (கிருஷ்ணனிடம்) கூறிவிட்டு, நான் சண்டயிடமாட்டேன் என்று கோவிந்தரிம் (கிருஷ்ணரிடம்) கூறிவிட்டு மௌனமாக இருந்துவிட்டான்.

तमुवाच हृषीकेशः प्रहसन्निव भारत।

सेनयोरुभयोर्मध्ये विषीदन्तमिदं वचः।।2.10।।

பாரதரே, அவனிடம் (அர்ஜுனனிடம்) கிருஷ்ணன் பரிகாசம் செய்வதுபோல இரண்டு படைகளின் இடையே சோகமாக இருக்கும் அர்ஜுனனிடம் இதனை கூறினார்.

अत्र 'दृष्ट्वा तु पाण्डवानीकम् ' (गीता 1.2)

इत्यारभ्य यावत् 'न योत्स्य इति गोविन्दमुक्त्वा तूष्णीं बभूव ह ' (गीता 2.9) इत्येतदन्तः प्राणिनां शोकमोहादिसंसारबीजभूतदोषोद्भवकारणप्रदर्शनार्थत्वेन व्याख्येयो ग्रन्थः।

இங்கு "திருஷ்ட்வாது பாண்டவானீகம்" (பாணடவர்களின் படையை பார்த்துவிட்டு) என்று துவங்கி "ந யோதிஸ்ய இதி கோவிந்தமுக்தவா தூஷ்ணீம் பபூவஹ" (நான் போரிடமாட்டேன் என்று கோவிந்தனிடம் கூறி மௌனம் ஆனான்) என்பது வரையில் ஜீவன்களில் சோகம், மோகம் முதலிய சம்சாரத்திற்கு மூலமான தோஷங்கள் தோன்றுவதற்கான காரணங்கள் காண்பிப்பதாக விளக்கப்பட வேண்டும்.

तथाहि -- अर्जुनेन राज्यगुरुपुत्रमित्रसुहृत्स्वजनसंबन्धिबान्धवेषु 'अहमेतेषाम् ' 'ममैते ' इत्येवंप्रत्ययनिमित्तस्नेहविच्छेदादिनिमित्तौ आत्मनः शोकमोहौ प्रदर्शितौ 'कथं भीष्ममहं संख्ये ' (गीता 2.4) इत्यादिना।

ஏனென்றால், அர்ஜுனனாய் ராஜ்ஜியம், குரு, மகன், நண்பன் விரும்புபவர்கள், தன்னுடையவர்கள், சொந்தக்காரர்கள் முதலியவர்களில் "நான் இவர்களுடையவன் இவர்கள் என்னவர்கள்" என்று இவ்வாறு தவறான அறிவால் உண்டாகும் பற்று, வெறுப்பு முதலியவற்றால் தன்னுடைய சோகமும் மோகமும் காண்பிக்கப்பட்டது "கதம் பீஷ்ம்மஹம் சங்கயே" (நான் எவ்வாறு பீஷ்மருடன் போரிடுவேன்) என்பது முதலியவைகளால்

शोकमोहाभ्यां ह्यभिभूतविवेकविज्ञानः स्वत एव क्षत्रधर्मे युद्धे प्रवृत्तोऽपि तस्माद्युद्धादुपरराम; परधर्मं च भिक्षाजीवनादिकं कर्तुं प्रववृते।

சோகம் மற்றும் மோகத்தாலேயே மூடப்பட்டதான விவேக புத்தியானது, தானே முன்னர் க்ஷத்திரிய தர்மமான போரில் பிரவிருத்தித் திருத்தாலும், அதனிலிருந்து பின்வாங்கினான் அதுமட்டுமல்லாமல், பரதர்மமான (மற்றவரின் தர்மமான) பிக்ஷையினால் வாழ்வது முதலியவற்றை செய்யவும் துனிகிறான்.

तथा च सर्वप्राणिनां शोकमोहादिदोषाविष्टचेतसां स्वभावत एव स्वधर्मपरित्यागः प्रतिषिद्धसेवा च स्यात्।

இவ்வாறே, எல்லா ஜீவராசிகளும், சோகம், மோகம், முதலிய தோஷங்களால் எவருடைய மனது பிடிக்கப்பட்டதோஅவர்கள் இயல்பாகவே தன்னுடைய தர்மத்தினை விடுவதும் நிராகரிக்கப்பட்ட தர்மத்தினை கடைபிடிப்பதும் ஆகிறது.

स्वधर्मे प्रवृत्तानामपि तेषां वाङ्मनःकायादीनां प्रवृत्तिः फलाभिसंधिपूर्विकैव साहंकारा च भवति।

தன்னுடைய தர்மத்தில் பிரவிருத்தித்தாலும் கூட அவர்களுடைய சொல், மனது, உடல் முதலியவைகளின் செயல்கள் பலனை எதிர்பார்தாகவே அகங்காரமுடையதாகவும் இருக்கும்.

तत्रैवं सति धर्माधर्मोपचयात् इष्टानिष्टजन्मसुखदुःखादिप्राप्तिलक्षणः संसारः अनुपरतो भवति। इत्यतः संसारबीजभूतौ शोकमोहौ।

இப்படியான நிலையில், புண்ணி - பாவமானது வளர்ப்பதால் நல்ல-கெட்ட பிறவிகளும் இன்பம்-துன்பம் அடைவதான லக்ஷணையுடைய சம்சாரமும் முடிவற்றதாக ஆகும், அதனால், சம்சாரத்திற்க்கு காரணமானது சோகமும் மோகமும் ஆகும்.

तयोश्च सर्वकर्मसंन्यासपूर्वकादात्मज्ञानात् नान्यतो निवृत्तिरिति तदुपदिदिक्षुः सर्वलोकानुग्रहार्थम् अर्जुनं निमित्तीकृत्य आह भगवान्वासुदेवः -- 'अशोच्यान् ' (गीता 2.11) इत्यादि।।

இவையிரண்டும் எல்லா கர்மமும் விடுவதான சன்யாசத்துடன் உள்ள ஆத்மஞானத்தினாலேயொழிய வேறு எதனாலும் நீங்காது. அதனால், அதனை உபதேசிக்கும் ஆசையுடன் எல்லா ஜீவன்களையும் அனுகிரகிக்கவும் அர்ஜுனனை நிமித்தமாக வைத்து கூறுகிறார் பகவான் வாசுதேவன் "அஷோச்யான்" (சோகப்படக்கூடாதவைகளுக்கு) முதலியவைகளால்.

अत्र केचिदाहुः -- सर्वकर्मसंन्यासपूर्वकादात्मज्ञाननिष्ठामात्रादेव केवलात् कैवल्यं न प्राप्यत एव। किं तर्हि? अग्निहोत्रादिश्रौतस्मार्तकर्मसहितात् ज्ञानात् कैवल्यप्राप्तिरिति सर्वासु गीतासु निश्चितोऽर्थ इति। ज्ञापकं च आहुरस्यार्थस्य -- 'अथ चेत्त्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ' (गीता 2.33) 'कर्मण्येवाधिकारस्ते ' (गीता 2.47) 'कुरु कर्मैव तस्मात्त्वम् ' (गीता 4.15) इत्यादि।

இங்கு சிலர் கூறுவர் எல்லா கர்மமும் விடுவதான சன்யாசமானதுடன் உள்ள ஆத்ம ஞானத்தல் மட்டுமே மோக்ஷமானது நிச்சயமாக அடைப்பட முடியாது, வேறு எவ்வாறு என்றால், அக்னிஹோத்திரம் முதலிய ஷ்ரௌத் (வேதகர்மங்களும்) ஸ்மார்த்த (ஸ்மிருதி கர்மங்களும்) கர்மங்களுடன் கூடியதான ஞானத்தாலேயே கைவல்யம் உண்டாகும் என்று, இதுவே கீதை முழுவதிலும் நிச்சயிக்கப்பட்ட பொருள் என்று பிரமானமும் இந்த விஷயத்தில் கூறுவர் - "அத சேத்வமிமம் தர்ம்யம் சங்கிராமம் ந கரிஷ்யஸீ" (இந்த தர்மமான போரிடுதலை நீ

செய்யவில்லையானால்), "கர்மன்யேவாதிகாரஸ்தே" (கர்மத்தில் மட்டுமே உனக்கு அதிகாரம்), "குரு கர்மைவ தஸ்மாத்தவம்" (நிச்சயமாக கர்மத்தினை மட்டுமே நீ அதனால் செய்வாயாக) முதலியவைகள்.

हिंसादियुक्तत्वात् वैदिकं कर्म अधर्माय इतीयमप्याशङ्का न कार्या। कथम्? क्षात्रं कर्म युद्धलक्षणं गुरुभ्रातृपुत्रादिहिंसालक्षणमत्यन्तं क्रूरमपि स्वधर्म इति कृत्वा न अधर्माय; तदकरणे च 'ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ' (गीता 2.33) इति ब्रुवता यावज्जीवादिश्रुतिचोदितानां पश्वादिहिंसालक्षणानां च कर्मणां प्रागेव नाधर्मत्वमिति सुनिश्चितमुक्तं भवति -- इति।।

இம்சை முதலியவை கூடியதாக உள்ளதால் வைதிகமான கர்மம் அதர்மத்தினையே அளிக்கும் என்று இதுபோல சந்தேகமும் செய்யக்கூடாது, எவ்வாறு என்றால், க்ஷத்திரியரின் கர்மம் போரிடுவது, அதில் குரு, சகோதரர், மகன் முதலியவர்களின் இம்சை (அழிவு துன்பம்) சுவரூபாக மிகவும் குரூரமானதாக இருந்தாலும் தன்னுடைய சொந்ததர்மமாக ஆவதால் தர்மத்தையே தரும் அது செய்யப்படாவிட்டால் "தத ஸ்வதர்மம் கீர்த்தம் ச ஹித்வ பாபமவாப்யஸி" (அதனால் தன்னுடைய தர்மத்தையும் நல்லபெயரையும் விடுத்து (இழத்து) பாவத்தினை அடைவாய்) என்று பகவானால் எதுவரை உயிருள்ளதோ முதலிய (அதுவரை சந்தியா உபாசனை செய்ய வேண்டும் அக்னிஹோத்திரம் செய்ய வேண்டும்) ஷ்ருதியில் விதிக்கப்பட்ட பசு முதலியவைகளின் ஹிம்சை செய்வதான கர்மத்தினையும் முன்னரே அதர்மமானது இல்லை என்று மிகத்தீர்மானமாக கூறப்பட்டது ஆகிறது.

तदसत्; ज्ञानकर्मनिष्ठयोर्विभागवचनाद्बुद्धिद्वयाश्रययोः।

அது தவறு, ஞானம் மற்றும் கர்ம நிஷ்டைகளின் பிரித்து கூறுவதான வெவ்வேறு புத்தியினை சார்ந்தநிலை கூறியுள்ளதால்.

'अशोच्यान् ' (गीता 2.11) इत्यादिना भगवता यावत् 'स्वधर्ममपि चावेक्ष्य ' (गीता 2.31) इत्येतदन्तेन ग्रन्थेन यत्परमार्थात्मतत्त्वनिरूपणं कृतम्, तत्सांख्यम्। तद्विषया बुद्धिः आत्मनो जन्मादिषड्विक्रियाभावादकर्ता आत्मेति प्रकरणार्थनिरूपणात् या जायते, सा सांख्यबुद्धिः। सा येषां ज्ञानिनामुचिता भवति, ते सांख्याः।

"அசோச்யான்" (கவலைபட தகுதியில்லாததற்கு) முதலியவைகளால் பகவானால் "ஸ்வதர்மமபி சாவேஷ்ய" (தன்னுடைய தர்மத்தையும் கண்டு) என்பது வரையிலுள்ள கிரந்தத்தினால் எந்த பரமார்த்தமான ஆத்ம தத்துவமானது நிரூபிக்கப்பட்டதோ அது சாங்கியம் ஆகும், அது சம்பந்தப்பட்டதான புத்தியானது ஆத்மாவானது பிறப்பு முதலிய (இருத்தல், பிறப்பு, வளர்ச்சி, மாற்றம், தேய்தல், இறப்பு ஆகியவை) ஆறுவகை மாற்றமல்லாததால் செயலில்லாத

(அற்றது ) ஆத்மா என்று பிரகரணத்தின் (பகுதியின் பொருளானது நிச்சயமாவதால் எந்த புத்தியானது தோன்றுகிறதோ அது சாங்க்ய புத்தி. அது எந்த ஞானிகளுக்கு ஏற்புடையதாகின்றதோ அவர்கள் சாங்கியர்களாகும் (சாங்கியயோகம் தர்ஷணத்தில் கூறும் சாங்கியமும் இதுவும் வெவ்வேறு).

एतस्या बुद्धेः जन्मनः प्राक् आत्मनो देहादिव्यतिरिक्तत्वकर्तृत्वभोक्तृत्वाद्यपेक्षो धर्माधर्मविवेकपूर्वको मोक्षसाधनानुष्ठानलक्षणो योगः। तद्विषया बुद्धिः योगबुद्धिः। सा येषां कर्मिणामुचिता भवति ते योगिनः।

இந்த புத்தியானது பிறப்பிற்க்கு முன்னர் ஆத்மாவானது உடல் முதலியவற்றிலிருந்து வேறுபட்டு, செய்பவர் அனுபவிப்பவர் ஆகிய எதிர்சார்ந்த எந்த தர்மம் மற்றும் அதர்மம் ஆகியவற்றின் விசாரத்தோடு கூடியதான மோக்ஷத்திற்க்கு காரணமான சாதனைகளை செய்வதான இயல்புடையதான யோகம் அது குறித்த புத்தி யோகபுத்தி, அது எந்தெந்த கர்மம் புரிப்பவர்களுக்கு - ஏற்புடையதாக தோன்றுகிறதோ அவர்களே யோகிகள் ஆகும்.

तथा च भगवता विभक्ते द्वे बुद्धी निर्दिष्टे 'एषा तेऽभिहिता सांख्ये बुद्धिर्योगे त्विमां श्रृणु ' (गीता 2.39) इति।

இப்படியாக பகவானால் இரண்டு வகை புத்தியானது பிரித்து கூறப்படடது, "ஏஷா தே அபிஹிதோ சாங்கயே புத்திர்யோகே த்வினாம் ஷ்ருணு" (இப்படி சாங்க்யே புத்தியானது உனக்கு கூறப்பட்டது இப்பொழுது யோகபுத்தியினை குறித்து கேள்) என்று

तयोश्च सांख्यबुद्ध्याश्रयां ज्ञानयोगेन निष्ठां सांख्यानां विभक्तां वक्ष्यति 'पुरा वेदात्मना मया प्रोक्ता ' (गीता 3.3) इति।

அவையிரண்டில் சாங்கியபுத்தியினை சார்ந்ததான ஞானயோகத்தால் நிலைப்பட்ட சாங்கியர்களை பிரித்து கூறுகிறார் - "புரா வேதாத்மனா மயா ப்ரோக்தா" (முன்னர் வேதமாக என்னால் கூறப்பட்டது) என்று

तथा च योगबुद्ध्याश्रयां कर्मयोगेन निष्ठां विभक्तां वक्ष्यति -- 'कर्मयोगेन योगिनाम् ' (गीता 3.3) इति।

அதுபோல யோகபுத்தியினை சார்ந்தான கர்மயோகத்தால் நிலைப்பட்டவர்களை பிரித்து கூறுகிறார் - "கர்மயோகேன யோகினாம்" (கர்மயோகத்தால் யோகிகளுக்கு) என்று.

एवं सांख्यबुद्धिं योगबुद्धिं च आश्रित्य द्वे निष्ठे विभक्ते भगवतैव उक्ते ज्ञानकर्मणोः कर्तृत्वाकर्तृत्वैकत्वानेकत्वबुद्ध्याश्रययोः युगपदेकपुरुषाश्रयत्वासंभवं पश्यता।

இவ்வாறு சாங்கியபுத்தியிலும் யோகபுத்தியிலும் சார்ந்த இரண்டு நிலைப்பட்டவர்களை பிரித்து பகவானாலேயே கூறப்பட்டதால், ஞானம் மற்றும் கர்மத்தில் செய்பவர் தன்மை மற்றும்

செய்பவர் என்ற தன்மையற்ற, ஒன்று மற்றும் பல போன்ற புத்திகளை சார்ந்தது ஒரு புருஷனில் இருத்தல் இயலாது என்பதனை கண்டவரால்.

यथा एतद्विभागवचनम्, तथैव दर्शितं शातपथीये ब्राह्मणे -- 'एतमेव प्रव्राजिनो लोकमिच्छन्तो ब्राह्मणाः प्रव्रजन्ति ' (बृ 0 4.4.22) इति सर्वकर्मसंन्यासं विधाय तच्छेषेण 'किं प्रजया करिष्यामो येषां नोऽयमात्मायं लोकः ' (बृ 0 4.4.22) इति।

எப்படி இது பிரித்துகூறப்பட்டதோ அப்படியே காணப்படுகிறது. ஷதபத பிராம்மணத்தில் - "ஏதமேவ ப்ரவ்ரா ஜினோ லோகமிச்சந்தோ ப்ராம்மணா: ப்ரவ்ரஜந்தி" (இந்த நிலையையே அடைய வைராக்கிய முள்ளவர்களான ஆத்மலோகத்தை விரும்பும் பிராம்மணர்கள் சன்யாசம் செய்கிறார்கள்) என்று எல்லா கர்மத்தையும் சன்யாசம் செய்வதை கூறிவிட்டு அதன் மீதமாக (பாக்கியாக, முழுமை செய்வதாக) "கிம் ப்ரஜயா கரிஷ்யாமோ யேஷம் நோ அயமாத்மாயம் லோக:" (பிரஜைகளால் என்ன செய்வோம் நம்முடைய இந்த ஆத்மாவே லோகமோ (அதனால்) என்று.

तत्र एव च प्राक् दारपरिग्रहात् पुरुषः आत्मा प्राकृतो धर्मजिज्ञासोत्तरकालं लोकत्रयसाधनम् -- पुत्रम्, द्विप्रकारं च वित्तं मानुषं दैवं च; तत्र मानुषं कर्मरूपं पितृलोकप्राप्तिसाधनं विद्यां च दैवं वित्तं देवलोकप्राप्तिसाधनम् सोऽकामयत ' (बृ 0 1.4.17) इति अविद्याकामवत एव सर्वाणि कर्माणि श्रौतादीनि दर्शितानि।

அந்த இடத்திலேயே "ப்ர" (கல்யாணத்திற்கு முன்னர் இந்த புருஷணனாவன் அஞ்ஞானியான நிலையில் தர்மஜிஞ்ஞஸை (தர்மத்தையறியும் ஆசை) செய்து மூன்று உலகத்தையும் அடையும் செயல்களான மகன் மற்றும் இரண்டு விதமான சொத்துக்கள், தெய்வ மற்றும் மனிதனுடையதும் என்பதில் மனித சம்பந்தமான சொத்தானது கர்ம ரூபமுடையது பித்ருலோகம் முதலிய உலகத்தையடைய கருவியாகும். வித்யாவோ தெய்வ சொத்து (அருள்) தெய்வ லோகத்தை அடையும் வழி அதனை ஆசைபடுவாயாக)

என்று அவித்ய மற்றும் காமம் (ஆசை) உள்ளவருக்கே எல்லா வகையான கர்மங்களும் ஷ்ருதி முதலியவைகளில் காண்பிக்கப்பட்டுள்ளது.

तेभ्यः व्युत्थाय प्रव्रजन्ति ' (बृ 0 4.4.22) इति व्युत्थानमात्मानमेव लोकमिच्छतोऽकामस्य विहितम्।

"தேப்யோ வ்யுத்தாய ப்ரவ்ரஜந்தி" (அவைகளிலிருந்து விடுதலை அடைந்து சன்னியாசம் செய்கிறார்கள்) என்று சன்னியாசமானது ஆத்ம லோகத்தை மட்டுமே ஆசைப்படுபவரான விருப்பற்ற புருஷருக்கு விதிக்கப்பட்டுள்ளது.

तदेतद्विभागवचनमनुपपन्नं स्याद्यदि श्रौतकर्मज्ञानयोः समुच्चयोऽभिप्रेतः स्याद्भगवतः।।

அப்படிப்பட்ட இந்த பிரித்துகூறும் வார்த்தைகளாதை ஏற்புடையது இல்லை என்றாகும். ஷ்ருதியில் கூறப்பட்ட கர்மங்களுக்கும் ஞானத்திற்கும் சேர்க்கையை குறிக்க விருப்பமிருந்திருந்தால் பகவானுக்கு.

न च अर्जुनस्य प्रश्न उपपन्नो भवति 'ज्यायसी चेत्कर्मणस्ते ' (गीता 3.1) इत्यादिः।

அப்படியானால் அர்ஜுனனுடைய கேள்வியானது தேவையற்றதாக ஆகும். "ஜ்யாயசி சேத் கர்மணஸ்தே" (ஞானத்தை பெரிதாக (கர்மத்தை காட்டிலும்) கூற விரும்புகிறீர்களென்றால்) என்பது முதலிய.

एकपुरुषानुष्ठेयत्वासंभवं बुद्धिकर्मणोः भगवता पूर्वमनुक्तं कथमर्जुनः अश्रुतं बुद्धेश्च कर्मणो ज्यायस्त्वं भगवत्यध्यारोपयेन्मृषैव 'ज्यायसी चेत्कर्मणस्ते मता बुद्धिः ' (गीता 3.1) इति।।

ஒரே புருஷஹரால் அனுஷ்டிக்கப்படுவது இயலாது என்றால் ஞானம் மற்றும் கர்மத்தை பகவனால் முன்னால் கூறப்படாதது எவ்வாறு அர்ஜுனால் கேட்க்கப்படாத புத்தியானது (ஞானமானது) கர்மத்தைக்காட்டிலும் மேன்மையானது என்று பகவானிடத்தில் பொய் ஆரோபத்தையே செய்கிறான் "ஜ்யாயஸி சேத்கர்மணஸ்தே மதா புத்தி:" (ஞானத்தைக் காட்டிலும் கர்மமானது மேன்மையானது என்று ஏற்றிக்கிறீர்களென்றால்)

किञ्च -- यदि बुद्धिकर्मणोः सर्वेषां समुच्चय उक्तः स्यात् अर्जुनस्यापि स उक्त एवेति, 'यच्छ्रेय एतयोरेकं तन्मे ब्रूहि सुनिश्चितम् ' (गीता 5.1) इति कथमुभयोरुपदेशे सति अन्यतरविषय एव प्रश्नः स्यात्? न हि पित्तप्रशमनार्थिनः वैद्येन मधुरं शीतलं च भोक्तव्यम् इत्युपदिष्टे तयोरन्यतत्पित्तप्रशमनकारणं ब्रूहि इति प्रश्नः संभवति।।

ஆனாலும் ஞானம் மற்றும் கர்மமானது எல்லோரும் சமுச்சயமாக (சேர்க்கையாக கூறப்பட்டது என்றால் அர்ஜுனனுக்கும் அதுவே கூறப்பட்டது என்று ஆகும், "யச்ஷ்ரேய ஏதயோரேகே தன்மே ப்ருஹி சுனிஷ்சிதம" (எது மேன்மையானது இவைகளில் அதனை எனக்கு நிச்சயம் செய்து கூறுவீராக) என்று எவ்வாறு இரண்டும் (சமுச்சயம்) உபதேசிக்கப்பட்டது. என்றால் இரண்டில் ஒன்று என்கிற கேள்வி உண்டாகும். ஏனென்றால், பித்தமானதை குறைக்க ஆசைக் கொண்டவரிடம் வைத்தியர் இனிப்பும் குளிர்ந்ததும் சாப்பிட வேண்டும் என்று கூறப்பட்ட பின்னர், அவையிரண்டில் எது பித்ததை குறைப்பது அதனை கூறுங்கள் என்கிற கேள்வி எழாது.

अथ अर्जुनस्य भगवदुक्तवचनार्थविवेकानवधारणनिमित्तः प्रश्नः कल्प्येत, तथापि भगवता प्रश्नानुरूपं प्रतिवचनं देयम् -- मया बुद्धिकर्मणोः समुच्चय उक्तः, किमर्थमित्थं त्वं भ्रान्तोऽसि -- इति।

அதனால், அர்ஜுனால் பகவான் கூறிய விஷயத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை. என்பதால் கேள்வி என்று கற்பனை செய்தால், அப்படியும் பகவான் கேள்விக்கு பொருந்தியதான பதிலையே தரவேண்டும், என்னால் ஞானம் மற்றும் கர்மத்தின் சமுச்சயம் (சேர்க்கை) கூறப்பட்டது ஏன் இப்படி நீ குழம்புகின்றாய் என்று.

न तु पुनः प्रतिवचनमननुरूपं पृष्टादन्यदेव 'द्वे निष्ठे मया पुरा प्रोक्ते ' इति वक्तुं युक्तम्।।

அதைவிடுத்து, மீண்டும் பதிலில் கேள்விக்கு சம்பந்த மில்லமால் வேறு ஒன்றையே இரண்டு நிஷ்டைகளானது ( நிலைபாடுகள்) என்னால் முன்னால் கூறப்பட்டது என்று கூறுவது சரியில்லை ஸ்மார்த்த (ஸ்மிருதியில் கூறப்பட்ட கர்மத்தில் மட்டுமே ஞான சமுச்சயத்தை கூற விருப்பம் என்றால் பிரித்து (இரண்டையும்) கூறிய வசனம் எல்லாம் சரியாக ஆகாது.

नापि स्मार्तेनैव कर्मणा बुद्धेः समुच्चये अभिप्रेते विभागवचनादि सर्वमुपपन्नम्। किञ्च -- क्षत्रियस्य युद्धं स्मार्तं कर्म स्वधर्म इति जानतः 'तत्किं कर्मणि घोरे मां नियोजयसि ' (गीता 3.1) इति उपालम्भोऽनुपपन्नः।।

ஆனால் க்ஷத்திரியர்களுக்கு போர் என்பது ஒரு ஸ்மார்த்த (ஸ்மிருதியில் கூறப்பட்ட) கர்மமான ஸ்வதர்மம் ஆகும் என்று அறிபவனான (அர்ஜுனன்) "ததகிம் கர்மணி கோரேமாம் நியோஜயாஸி" (அது ஏன் கர்மம் எனும் பயங்கரத்தில் என்னை தள்ளுகிறீர்) என்று கூறுவது சரியும் அல்ல.

तस्माद्गीताशास्त्रे ईषन्मात्रेणापि श्रौतेन स्मार्तेन वा कर्मणा आत्मज्ञानस्य समुच्चयो न केनचिद्दर्शयितुं शक्यः।

அதனால் கீதை சாஸ்திரத்தில் சிறிதலவும் கூட ஷ்ரௌதம் அல்லது ஸ்மார்த்த கர்மத்தினும் ஆத்ம ஞானமானது. சமுச்சயம் செய்யப்படுகிறது. என்று எவராலும் காண்பிக்க இயலாது.

यस्य तु अज्ञानात् रागादिदोषतो वा कर्मणि प्रवृत्तस्य यज्ञेन दानेन तपसा वा विशुद्धसत्त्वस्य ज्ञानमुत्पन्नं परमार्थतत्त्वविषयम् 'एकमेवेदं सर्वं ब्रह्म अकर्तृ च ' इति,

ஆனால் எவர் அறியாயமையாய் விருப்பு - வெற்றுப்புடனோ கர்மத்தில் பிரவிருத்தி செய்தவர், யாகத்தினாலோ, தானத்தாலோ அல்லது தபசாலோ சித்தமானது தூய்மையடைந்து ஞானமானது தோன்றுகிறது. பரமார்த்த விஷயத்தினைப் பற்றி, ஒன்றானதே இவை எல்லாம், பிரம்மம் செயலற்றது என்றும்.

तस्य कर्मणि कर्मप्रयोजने च निवृत्तेऽपि लोकसंग्रहार्थं यत्नपूर्वं यथा प्रवृत्तिः, तथैव प्रवृत्तस्य यत्प्रवृत्तिरूपं दृश्यते न तत्कर्म येन बुद्धेः समुच्चयः स्यात्;

அவர் கர்மத்திலும் அதன் பலனிலும் நிவிருத்தியடைந்தாலும் உலக நன்மைக்காக முயற்சியுடன் முன்னர் எவ்வாறு பிரவிருத்தி செய்தாரோ அவ்வாறே கர்மங்களில் பிரவிருத்தி செய்தாலும் எந்த முயர்ச்சியானது காணப்படுகின்றதோ அது கர்மமில்லை, எதனுடன் ஞானமானது சமுச்சயம் ஆகுமோ.

यथा भगवतो वासुदेवस्य क्षत्रधर्मचेष्टितं न ज्ञानेन समुच्चीयते पुरुषार्थसिद्धये, तद्वत् तत्फलाभिसंध्यहंकाराभावस्य तुल्यत्वाद्विदुषः।

எவ்வாறு பகவான் வாசுதேவரால் செய்யப்பட்ட க்ஷத்தரிய கர்மமோ அது ஞானத்துடன் சமுச்சயம் செய்யப்படவில்லை புருஷார்த்ததின் (மோக்ஷத்தின்) அடைவதற்கு அப்படியே பலனில் ஆசையும் அகங்காரம் இன்மையாலும் சமமானதாகும் ஞானிக்கும்.

तत्त्वविन्नाहं करोमीति मन्यते, न च तत्फलमभिसंधत्ते। यथा च स्वर्गादिकामार्थिनः अग्निहोत्रादिकर्मलक्षणधर्मानुष्ठानाय आहिताग्नेः काम्ये एव अग्निहोत्रादौ प्रवृत्तस्य सामि कृते विनष्टेऽपि कामे तदेव अग्निहोत्राद्यनुतिष्ठतोऽपि न तत्काम्यमग्निहोत्रादि भवति।

தத்துவத்தை அறிந்தவர் (ஞானி) நான் செய்கிறேன் என்று நினைப்பதுமில்லை. அதன் பலனில் ஆசையும் வைப்பதுமில்லை. எவ்வாறு, கவர்கம் முதலியதை விரும்புவார் அக்னிஹோத்ரம் முதலிய காமிய கர்மங்களை அனுஷ்டிப்பதற்கு அக்னியை போற்றி வளர்த்து ஆசையாலேயே (காமத்தாலேயே) அக்னிஹோத்ரம் முதலியவற்றில் பிரவிருந்தித்து பாதி நிலையில் ஆசையானது அழிந்துபோனாலும் அந்த நிலையிலேயே அக்னிஹோத்ரம் முதலியவற்றை நடத்தி முடித்தாலும் அந்த அக்னிஹோத்ரமானது காமியகர்மம் ஆகாது.

तथा च दर्शयति भगवान् -- 'कुर्वन्नपि न लिप्यते ' (गीता 5.1) 'न करोति न लिप्यते ' (गीता 13.31) इति तत्र तत्र।।

அதனையே பகவான் காண்பிக்கின்றார் "குர்வன்னபி" (செய்து கொண்டிருந்தாலும்) "ந கரோதி ந லிப்யதே" (செய்வதில்லை பற்றுவதுமில்லை) என்று ஆங்காங்கே.

यच्च 'पूर्वैः पूर्वतरं कृतम् ' (गीता 4.15) 'कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः ' (गीता 3.20) इति, तत्तु प्रविभज्य विज्ञेयम्।

இதனைத் தவிர "பூர்வை: பூர்வதரம் கிருதம" (முன்னவர்கள் முன்னது போலவே செய்தது) "கர்மணைவ ஹி சம்ஸித்திமாஸ்திதா ஜனகாதய:" (கர்மத்தினாலேயே நிச்சயமாக மேன்மைநிலையில் நின்றார்கள் ஜனகர் முதலியவர்கள்) என்ற இதனை பிரித்து பார்த்து அறிய வேண்டும்.

तत्कथम्? यदि तावत् पूर्वे जनकादयः तत्त्वविदोऽपि प्रवृत्तकर्माणः स्युः, ते लोकसंग्रहार्थम् 'गुणा गुणेषु वर्तन्ते ' (गीता 3.28) इति ज्ञानेनैव संसिद्धिमास्थिताः, कर्मसंन्यासे प्राप्तेऽपि कर्मणा सहैव संसिद्धिमास्थिताः, न कर्मसंन्यासं कृतवन्त इत्यर्थः।

அது எவ்வாறு முன்பிருந்த ஜனகர் முதலியவர்கள் ஞானிகலானாலும் கூட கர்மத்தில் ஈடுபட்டவர்களாக இருந்தார்களானால் அது உலக நன்மைக்கு "குணா குணேஷு வர்தந்தே" (குணம் குணத்தில் இருக்கும்) என்ற ஞானத்தினாலேயே மேன்மைநிலையை அடைந்தார்கள், கர்ம சன்யாசத்தினை (தகுதியை) அடைந்தாலும் கூட கர்மத்தினை புரிந்தே மேன்மை நிலையை அடைந்தார்கள். கர்ம சன்யாசத்தினை செய்யவில்லை என்று இதன் பொருள்.

अथ न ते तत्त्वविदः; ईश्वरसमर्पितेन कर्मणा साधनभूतेन संसिद्धिं सत्त्वशुद्धिम्, ज्ञानोत्पत्तिलक्षणां वा संसिद्धिम्, आस्थिता जनकादय इति व्याख्येयम्।

ஆனால் இதனை விடுத்து அந்த தத்துவத்தை அறிந்தவர்கள் பகவானுக்கு சமர்பிக்கப்பட்ட கர்மமான சாதனைகளினால் மேன்மைநிலையை அடைந்தார்கள் என்றோ ஞானம் அடையவதற்கு மனத்தூய்மையை அடைந்தார்கள் என்றோ அதனால் மேன்மைநிலையை அடைந்தார்கள் ஜனகர்முதலியவர்கள் என்று கூறக்கூடாது.

एतमेवार्थं वक्ष्यति भगवान् 'सत्त्वशुद्धये कर्म कुर्वन्ति ' इति। '(गीता 5.11) स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ' (गीता ( 18.46) इत्युक्त्वा सिद्धिं प्राप्तस्य पुनर्ज्ञाननिष्ठां वक्ष्यति -- 'सिद्धिं प्राप्तो यथा ब्रह्म ' (गीता 18.50) इत्यादिना।।

இதனை குறிக்கவே (இந்த பொருளிலேயே) பகவான் கூறுகிறார் "சத்துவசுத்தயே கர்ம குர்வந்தி" (மனத்தூய்மைக்காக கர்மத்தை செய்கின்றனர்) என்று "ஸ்வகர்மனா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:" (தன்னுடைய கர்மங்களால் அதனை (பிரம்மத்தை) வழிபட்டு பக்குவ நிலையை அடைகின்றார்கள் மனிதர்கள்) என்று கூறி பக்குவத்தை அடைந்தார்களின் ஞான நிஷ்டையை (நிலைபாடு) கூறுகிறார் "ஸித்தம் ப்ராப்தோ யதா ப்ரம்ம" (பக்குவத்தை அடைந்தவர்கள் பிரம்மத்தைப் போல) என்பது முதலியவைகளால்

तस्माद्गीताशास्त्रे केवलादेव तत्त्वज्ञानान्मोक्षप्राप्तिः न कर्मसमुच्चितात्, इति निश्चितोऽर्थः।

அதனால், கீதையில் தத்துவ ஞானத்தால் மட்டுமே மோக்ஷமானது உண்டாகும் கர்மத்துடன் சமுச்சயம் செய்வதால் அல்ல என்பது நிச்சயமாகும் பொருள்.

यथा चायमर्थः, तथा प्रकरणशो विभज्य तत्र तत्र दर्शयिष्यामः।।

எப்படி இந்த விஷயமோ அப்படியே ஒவ்வொரு பகுதியின் அடிப்படையிலும் பிரித்து அங்காங்கு காண்பிப்போம்.

तत्रैव धर्मसंमूढचेतसो मिथ्याज्ञानवतो महति शोकसागरे निमग्नस्य अर्जुनस्य अन्यत्रात्मज्ञानादुद्धरणमपश्यन् भगवान्वासुदेवः ततः कृपया अर्जुनमुद्दिधारयिषुः आत्मज्ञानायावतारयन्नाह --

அங்கு இவ்வாராக தர்மத்தினை நிச்சயிக்க முடியாத நிலையில் உள்ளவனாக மிகவும் பெரிய சோகமெனும் கடலில் மூழ்கியிருக்கும் அர்சுனனுக்கு ஆத்மஞானத்தைத் தவிர வேறு வகையால் மேன்மையை காணாமல் பகவான் வாசுதேவர், அதனால், அர்சுனனை கரையேற்ற ஆசையுடன் ஆத்ம ஞானத்திற்க்காக இதனை கூற துவங்குகின்றார்.

श्रीभगवानुवाच –

ஸ்ரீபகவான் கூறினார்

अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे।
गतासूनगतासूंश्च नानुशोचन्ति पण्डिताः।। 2.11।।

வருத்தப்பட தகாததற்கு வருத்தப்படுகின்ற நீ மிகவும் புத்திசாலியைப் போன்றும் பேசுகின்றாய், போனதையும் வருவதையும் குறித்து கவலைப்படமாட்டார்கள் பண்டிதர்கள்.

अशोच्यान् इत्यादि। न शोच्या अशोच्याः भीष्मद्रोणादयः, सद्वृत्तत्वात् परमार्थस्वरूपेण च नित्यत्वात् , तान् अशोच्यान् अन्वशोचः अनुशोचितवानसि 'ते म्रियन्ते मन्निमित्तम्, अहं तैर्विनाभूतः किं करिष्यामि राज्यसुखादिना ' इति।

துன்பப்படக்கூடாதது "அசோச்யா" பீஷ்மர் துரோணர் முதலியார்கள் உண்மை வழிநடப்பவர்களானதாலும் பரமார்த்தமாக (உண்மைநிலை) நித்தியமாக இருந்தாலும் அப்படிப்பட்ட,"அசோச்யான் அன்வசோச்யா" (துன்பப்படக்கூடாதவர்களைக் குறித்து துன்பப்படும்) துன்பப்படுகின்றவனாய் இருக்கின்றாய் அவர்கள் இறப்பார்கள் என்னால் நான் அவர்கள் இல்லாமல் என்ன செய்வேன் ராஜ்யம் சுகம் முதலியவைகளைக் கொண்டு என்று.

त्वं प्रज्ञावादान् प्रज्ञावतां बुद्धिमतां वादांश्च वचनानि च भाषसे। तदेतत् मौढ्यं पाण्डित्यं च विरुद्धम् आत्मनि दर्शयसि उन्मत्त इव इत्यभिप्रायः।

"த்வம் ப்ரஞ்ஞாவதான் ச பாஷஸே" (நீ புத்திசாலிகளின் பேச்சு), அறிவுடையவர்கள் புத்தியுள்ளவர்கள் பேச்சுக்கள் கூட வசனங்கள் (கூட பேசுகின்றாய்) அந்த இப்படிப்பட்ட

மூடத்தனமும் பண்டித்தன்மையும் விரோதமானதினை ஆத்மாவில் காண்பிக்கின்றாய் பித்துபிடித்தவன் போல என்று அபிப்பிராயம்.

यस्मात् गतासून् गतप्राणान् मृतान्, अगतासून् अगतप्राणान् जीवतश्च न अनुशोचन्ति पण्डिताः आत्मज्ञाः।

ஏனென்றால் "கதா சூன" (சென்றதினையும்) பிராணன் போனவர்கள் இறந்தவர் "அகதாசூன" (வருவதினையும) வராத பிராணனையுடைவர்கள் உயிரோடிருப்பவர் பற்றி (கவலைப்படமாட்டார்கள் பண்டிதர்கள்) ஆத்மஞானிகள் "ச ந அனுசோசயன்தி பண்டிதா:"

पण्डा आत्मविषया बुद्धिः येषां ते हि पण्डिताः, 'पाण्डित्यं निर्विद्य ' इति श्रुतेः।

பண்டா (என்றால்) ஆத்மாவினை குறித்த புத்தியானது எவருக்கு உள்ளதோ அவர்களே பண்டிதர்கள்" பாண்டித்யம் நிர்வித்ய" (பாண்டித்யத்தை அடைந்து) என்கிறது ஷ்ருதி

परमार्थतस्तु तान् नित्यान् अशोच्यान् अनुशोचसि, अतो मूढोऽसि इत्यभिप्रायः।।

உண்மையிலேயே (பரமார்த்தமாக) நித்தியமான வருத்தப் படத்தாததிற்கு வருத்தப்படுகின்றாய் அதனால் மூடனாகின்றாய் என்று அபிப்பிரயம்.

कुतस्ते अशोच्याः, यतो नित्याः। कथम्? –

எங்கனம் அவர்கள் வருத்தப்படத்தகாதவர்கள் என்றால் நித்தியமானவர்களானதால் எவ்வாறு

न त्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः।
न चैव न भविष्यामः सर्वे वयमतः परम्।। 2.12।।

நான் இல்லை என்ற நிலையோ, நீ இல்லாத நிலையோ அல்லது இந்த அரசர்கள் இல்லாத நிலையோ என்றும் இல்லை, நாம் தோன்றமாட்டோம் என்ற நிலையும் இல்லை அதனால் நாம் எல்லோரும் நித்தியமானவர்களே.

न तु एव जातु कदाचित् अहं नासम्, किं तु आसमेव। अतीतेषु देहोत्पत्तिविनाशेषु घटादिषु वियदिव नित्य एव अहमासमित्यभिप्रायः।

நிச்சமாக பிறக்கவில்லை எப்பொழுதும் என்றோ நான் இருக்கமாட்டேன் என்றோ எப்பொழுதும் இல்லை எப்பொழுதும் இருப்பவரே கடந்த (முன்பிருந்த) உடல்களானது தோன்றி மறைந்த பொழுதும் நித்தியமாக நிச்சயமாக நான் இருக்கின்றேன் என்று அபிப்பிராயம்.

तथा न त्वं न आसीः, किं तु आसीरेव। तथा न इमे जनाधिपाः न आसन्, किं तु आसन्नेव।

அதுபோல நீ இல்லாது போகவில்லை ஆனால் நிச்சயமாக இருந்தாய் அதுபோல, இந்த அரசர்கள் இருக்கவில்லை என்றில்லை ஆனால் இருந்தார்களேயாவர்கள்.

तथा न च एव न भविष्यामः, किं तु भविष्याम एव, सर्वे वयम् अतः अस्मात् देहविनाशात् परम् उत्तरकाले अपि। त्रिष्वपि कालेषु नित्या आत्मस्वरूपेण इत्यर्थः।

அதுபோல நாம் இதற்கு பின்னர் இல்லாதுபோவோம் என்றில்லை ஆனால் நாம் நிச்சயமாக இருப்போம் நாம் எல்லோரும் அதனால் இந்த சரீரமானது அழிந்த பின்னர் பரத்திலும் எதிர்காலத்திலும் மூன்று காலத்திலும் நித்தியமே ஆத்மசுவரூபமாக என்று பொருள்.

देहभेदानुवृत्त्या बहुवचनम्, नात्मभेदाभिप्रायेण।।

சரீரம் வேறுபடுகின்றது என்ற பிரிவினாலேயே இங்கு பன்மை ஆத்மாவனது பிரிவுடையது (பல) என்ற அபிப்பிராயத்திலில்லை.

तत्र कथमिव नित्य आत्मेति दृष्टान्तमाह –

எதனைபோல நித்தியம் ஆத்மா அங்கு என்று உதாரணம் கூறுகிறார்.

देहिनोऽस्मिन्यथा देहे कौमारं यौवनं जरा।
तथा देहान्तरप्राप्तिर्धीरस्तत्र न मुह्यति।। 2.13।।

உடலில் இருப்பார் எப்படி இந்த உடலிலுள்ள (மாற்றங்களான) குமார, யுவா மற்றும் வயோதிக நிலையிலோ அப்படியே வேறு உடலை அடைவதும் என்பதால் தீரர் அதனை குறித்து மோகம் கொள்ள மாட்டார்கள்.

देहः अस्य अस्तीति देही, तस्य देहिनो देहवतः आत्मनः अस्मिन् वर्तमाने देहे यथा येन प्रकारेण कौमारं कुमारभावो बाल्यावस्था, यौवनं यूनो भावो मध्यमावस्था, जरा वयोहानिः जीर्णावस्था, इत्येताः तिस्रः अवस्थाः अन्योन्यविलक्षणाः।

தேகம் இவருக்கு இருக்கிறது என்று தேகி (உடலிலிருப்பார்) அந்த, உடலிலிருப்பவருக்கு, உடலைப் போன்ற ஆத்மாவில் இந்த நிகழ்காலத்தில், உடலில் எப்படியோ, எந்த வகையில் கௌமாரம் குமார நிலை, பால்யநிலை, யௌவனம் யுவ நிலை, நடுவயது நிலை, ஜரா வயது அழிந்த (முதிர்ந்த) அழியும் நிலை என்று இந்த மூன்று நிலைகளும் ஒன்று மற்றொன்றிலிருந்து விலஷனமானது (வேறுபட்டது)

तासां प्रथमावस्थानाशे न नाशः, द्वितीयावस्थोपजने न उपजन नम् आत्मनः। किं तर्हि? अविक्रियस्यैव द्वितीयतृतीयावस्थाप्राप्तिः आत्मनो दृष्टा। तथा तद्वदेव देहात् अन्यो देहो देहान्तरम्, तस्य प्राप्तिः देहान्तरप्राप्तिः अविक्रियस्यैव आत्मनः इत्यर्थः। धीरो धीमान्, तत्र एवं सति न मुह्यति न मोहमापद्यते।।

அவைகளில் முதல் நிலையானாது அழிவதால் அழிவுண்டவதில்லை இரண்டாம் நிலை தோன்றுவதால் தோன்றுவதில்லை ஆத்மா, பின் எவ்வாறு, மாற்ற மற்றதான ஆத்மாவிற்க்கே இரண்டாம் மூன்றாம் நிலையுண்டாவது காணப்படுகின்றது. அப்படியே, அதுபோலவே உடலிலிருந்து வேறு வேற்றுடல் அதன் அடைவு தேகாந்தர பிராப்தி (வேற்றுடலடைவு) மாற்றமற்றதான ஆத்மாவிற்க்கே என்று பொருள் தீரர், புத்தியுள்ளவர், அங்கு, இப்படிபட்ட நிலையில், மோகிப்பதில்லை, மோகத்தை அடைவதில்லை.

यद्यपि आत्मविनाशनिमित्तो मोहो न संभवति नित्य आत्मा इति विजानतः, तथापि शीतोष्णसुखदुःखप्राप्तिनिमित्तो मोहो लौकिको दृश्यते, सुखवियोगनिमित्तो मोहः दुःखसंयोगनिमित्तश्च शोकः। इत्येतदर्जुनस्य वचनमाशङ्क्य भगवानाह –

ஆனாலும், ஆத்மாவை அழிப்பதான மோகமானது உண்டாகாது ஆத்மாவானது நித்தியம் என்று அறிபவருக்கு, இருந்தாலும் குளிர், சூடு, இன்பம் துன்பம் ஆகிய காரணத்தால் உண்டாகும் லௌகிகமான (உலக சம்பந்தப்பட்ட) மோகமானது காணப்படுகிறது. இன்பமானது விட்டகலுதலும் துன்பமானது வந்தடைதலும் என்பதே சோகம் என்று அர்சுனஐடய சொற்களை (வசனத்தை) எதிர்பார்த்து (பகவான்) கூறுகிறார்.

मात्रास्पर्शास्तु कौन्तेय शीतोष्णसुखदुःखदाः।
आगमापायिनोऽनित्यास्तांस्तितिक्षस्व भारत।। 2.14।।

இந்திரியங்கள் சேர்க்கையே குத்திபுத்திரனே குளிர், சூடு, இன்பம், துன்பம் முதலியவைகள் தருகின்றதாகின்றது. அவைகள் தோன்றி மறைவும் குணமுடையதால் அநித்தியம் ஆகும் அதனால் அவைகளை சகிப்பாயாக பாரதா.

मात्रा आभिः मीयन्ते शब्दादय इति श्रोत्रादीनि इन्द्रियाणि। मात्राणां स्पर्शाः शब्दादिभिः संयोगाः। ते शीतोष्णसुखदुःखदाः शीतम् उष्णं सुखं दुःखं च प्रयच्छन्तीति। अथवा स्पृश्यन्त इति स्पर्शाः विषयाः शब्दादयः। मात्राश्च स्पर्शाश्च शीतोष्णसुखदुःखदाः। शीतं कदाचित् सुखं कदाचित् दुःखम्। तथा उष्णमपि अनियतस्वरूपम्। सुखदुःखे पुनः नियतरूपे यतो न व्यभिचरतः। अतः ताभ्यां पृथक् शीतोष्णयोः ग्रहणम्।

மாத்ரா என்றால் அதனால் அளக்கப்படுகின்றதோ (அறியப்படுகிறதோ) சப்தம் முதலியவைகள் என்று காதுகள் (ஷ்ரோத்ரம்) முதலிய இந்திரியர்கள் (புலன்கள்) அப்படிப்பட்ட மாத்ராக்களின் ஸ்பர்ஷம் (தீண்டல்) சப்தம் முதலியவைகளின் சேர்க்கை, அலை, ஷீதோஷ்ண சுகதுக்கதா:, குளிர், சூடு, இன்பம் மற்றும் துன்பம் கொடுக்கின்றது என்று அல்லது தீண்டப்படுகின்றது என்பதால் ஸ்பர்ஷம் விஷயங்கள் (தீண்டப்படும் விஷயங்கள்) சப்தம் முதலியவை மாத்ராக்களும் ஸ்பர்ஷங்களிலும் குளிர், சூடு, இன்பம் மற்றும் துன்பம் கொடுப்பது. குளிர் என்பது சிலவேளைகளில் இன்பம் சில வேளையில் துன்பம் அதுபோல சூடும் நிச்சயமற்ற தன்மையுடையது இன்பம் - துன்பம் என்ற நிச்சயமுள்ள தன்மையில் அவை மாற்றம் கொண்டுவருவதில்லை அதனால் அலைகளிலிருந்து வேறாக (தனியாக) குளிர் மற்றும் சூடு என்பது இங்கு தரப்பட்டுள்ளது.

यस्मात् ते मात्रास्पर्शादयः आगमापायिनः आगमापायशीलाः तस्मात् अनित्याः। अतः तान् शीतोष्णादीन् तितिक्षस्व प्रसहस्व। तेषु हर्षं विषादं वा मा कार्षीः इत्यर्थः।।

